

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

______________

1-ஆம் திருமொழி - தன்னேராயிரம்

______*_______

* தன்னேராயிரம்பிள்ளைகளோடு தளர்நடையிட்டுவருவான் *
பொன்னேய்நெய்யொடுபாலமுதுண்டு ஒருபுள்ளுவன்பொய்யோதவமும் *
மின்னேர்நுண்ணிடைவஞ்சமகள்கொங்கைதுஞ்ச வாய்வைத்தபிரானே *
அன்னே! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (1)

பொன்போல்மஞ்சனமாட்டிஅமுதூட்டிப்போனேன் வருமளவுஇப்பால் *
வன்பாரச்சகடம்இறச்சாடி வடக்கிலகம்புக்கிருந்து *
மின்போல்நுண்ணிடையாள்ஒருகன்னியை வேற்றுருவம்சொய்துவைத்து *
அன்பா! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மிம்தரவே. (2)

கும்மாயத்தொடுவெண்ணெய்விழுங்கிக் குடத்தயிர்சாய்த்துப்பருகி *
பொய்ம்மாயமருதானஅகரரைப் பொன்றுவித்துஇன்றுநீவந்தாய் *
இம்மாயம்வல்லபிள்ளைநம்பீ! உன்னைஎன்மகனேயின்பர்நின்றார் *
அம்மா! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (3)

மையார்கண்மடவாய்ச்சியர்மக்களை மையன்மைசெய்துஅவர்பின்போய் *
கொய்யார்பூந்துகில்பற்றித்தனிநின்று குற்றம்பலபலசெய்தாய் *
பொய்யா! உன்னைப்புறம்பலபேசுவ புத்தகத்துக்குளகேட்டேன்! *
ஐயா! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (4)

முப்போதும்கடைந்தீண்டியவெண்ணெயினோடு தயிரும்விழுங்கி *
கப்பாலாயர்கள்காவில்கொணர்ந்த கலத்தொடுசாய்த்துப்பருகி *
மெய்ப்பாலுண்டழுபிள்ளைகள்போல நீவிமிவிம்மியழுகின்ற *
அப்பா! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (5)

கரும்பார்நீள்வயல்காய்கதிர்ச்செந்நெலைக் கற்றாநினைமண்டித்தின்ன *
விரும்பாக்கன்றொன்றுகொண்டு விளங்கனிவீழஎறிந்தபிரானே! *
கரும்பார்மென்குழல்கன்னியொருத்திக்குச் சூழ்வலைவைத்துத்திரியும் *
அரம்பா! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (6)

மருட்டார்மென்குழல்கொண்டுபொழில்புக்கு வாய்வைத்துஅவ்வாயர்தம்பாடி *

சுருட்டார்மென்குழல்கன்னியர்வந்துஉன்னைச் சுற்றும்தொழநின்றசோதி! *
பொருட்டாயமிலேன்எம்பெருமான்! உன்னைப்பெற்றகுற்றமல்லாமற்றிங்கு
அரட்டா! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (7)

வாளாவாகிலும்காணகில்லார் பிறர்மக்களைமையன்மைசெய்து *
தோளாலிட்டுஅவரோடுதிளைத்து நீசொல்லப்படாதனசெய்தாய் *
கேளாய்ஆயர்குலத்தவர்இப்பழி கெட்டேன்! வாழ்வில்லை * நந்தன்
காளாய்! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (8)

தாய்மார்மோர்விற்கப்போவர் தகப்பன்மார்கற்றாநிரைப்பின்புபோவர் *
நீஆய்ப்பாடிஇளங்கன்னிமார்களை நேர்படவேகொண்டுபோதி *
காய்வார்க்குஎன்றும்உகப்பனவேசெய்து கண்டார்கறத்திரியும் *
ஆயா! உன்னைஅறிந்துகொந்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (9)

தொத்தார்பூங்குழல்கன்னியொருத்தியைச் சோலைத்தடம்கொண்டுபுக்கு *
முத்தார்கொங்கைபுணர்ந்துஇராநாழிகை மூவேழுசென்றபின்வந்தாய் *
ஒத்தார்க்குஒத்தனபேசுவர் உன்னைஉரப்பவேநான்ஒன்றும்மாட்டேன் *
அத்தா! உன்னைஅறிந்துகொண்டேன் உனக்குஅஞ்சுவன்அம்மம்தரவே. (10)

* காரார்மேனிநிறத்தெம்பிரானைக் கடிகமழ்பூங்குழலாய்ச்சி *
ஆராஇன்னமுதுண்ணத்தருவன்நான் அம்மம்டாரேனென்றமாற்றம் *
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன் பட்டர்பிரான்சொன்னபாடல் *
ஏராரின்னிசைமாலைவல்லார் எருடகேசரடியாரே. (11)

அடிவரவு : தன்னேர் பொன் கும்மாயம் மையார் முப்போது கரு மருட்டார் வாளா தாய்மார் தொத்தார் காரார் அஞ்சனம்.

---